**செய்தி வெளியீடு எண்: 800** **நாள்: 29.12.2011**

# 38 –வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி

## 3.1.2012 அன்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திருமதி எஸ்.கோகுல இந்திரா அவர்களால் தொடங்கி வைக்கப்படுகிறது.

தமிழக அரசு ஒவ்வொரு ஆண்டும் சென்னை தீவுத்திடலில் இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை நடத்தி வருகின்றது.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்** 38–வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை நடத்துவதற்கு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஏற்கனவே ஆணைப் பிறப்பித்துள்ளார்கள். அரசு துறைகளின் அரங்குகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் அமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் 2.1.2012 அன்று நிறைவடைய உள்ளது. **மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் பொருட்காட்சியினை 3.1.2012 அன்று மாலை 5.00 மணியளவில் தொடங்கி வைக்க உள்ளார்கள்.** 38–வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி மொத்தம் 70 நாட்கள் நடைபெறும். தீவுத்திடலில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா கலையரங்கத்தில தினந்தோறும் மாலை 6 மணியளவில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். பொருட்காட்சியைக் காண நுழைவுக் கட்டணம் பெரியவர்களுக்கு ரூ.15/–ம், சிறுவர்களுக்கு ரூ.10/–ம் வசூலிக்கப்படும். பொதுமக்கள் அனைவரும் இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியினை பார்வையிட்டு, கண்டுகளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அரசு முதன்மைச் செயலாளர்
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**